அமைச்சரைத் தலைவராகக்கொண்டு காற்று தூய்மை கெடுதல் தடுப்புக் குழு ஒன்று அமைக்கப்பட்டது. 1971, செப்டம்பர் முதல் வாரத்தில் இது குறித்து 212 லாரிகள் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டது.

DR. H. V. HANDE: Sir, may I know whether action is being taken against State Transport Buses also. Also whether it is a fact that a large number of State Transport Buses are quite old and therefore they emit a lot of smoke. As the Police Department are not able to take action against them, what the Government propose to do in the matter. Also, what are the rules and regulations governing it?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, எனக்கு கிடைத்த தகவல்படி நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற அரசாங்கத்துக்கு இல்லாத அக்கறை சுதந்திரா கட்சி உறுப்பினருக்கு இருப்பதால் ஆட்சேபனையில்லை. இருந்தாலும் அரசாங்க பஸ்களை அத்தகைய வழக்குகளில் பதிவு செய்யப்படவில்லை. அவைகளில் புகை கிளப்ப முடியாத அளவுக்கு சீர்திருத்த முயற்சிகள் படிப்படியாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

DR. H. V. HANDE: Sir, I take exception to the expression of the Hon. Minister regarding party politics. Even the Members of the Public Accounts Committee wanted the Government to rectify these defects and therefore there is no party politics involved in the matter. My question is whether any action has been taken by the Government wherever buses are in a dilapidated condition and are emiting smoke?

THE HON. THIRU K. ANBAZHAGAN: Mr. Speaker, one of the officials of the Transport Department is also a member of the Committee that has been formed. He is taking precautionary measures as far as possible in the Transport Department.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, இதை பார்க்க வேண்டுமென்று பொதுவாக குழுக்கள் போடப்பட்டு அந்த குழுக்கள் செயற்படுவதற்கு முயற்சிகள் அரசாங்கப் போக்குவரத்து துறையில் மேற்கொள்ளப்படுகின்றன. இருந்தாலும், நாம் எல்லோரும் நன்றாக இருக்கவேண்டுமென்று விரும்பினாலும் கூட வியாதி நீடிக்கிறது. அதே போல் இந்த வியாதி நீடிக்கிறது.

அரசு போக்குவரத்துத் துறைத் தொழிலாளர்களுக்கு ஊக்கப் பூரிப்பூதியம்

* 208 வினா—திரு. கா. வேழவேந்தன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தனியார் பேருந்துகளில் உள்ளது போல், அரசுப் போக்குவரத்துத் துறைத் தொழிலாளர்களுக்கும் ஊக்கப்படுத்தும் வகையில் வசூல் படி (Collection Batta) அளிக்க திட்டம் ஏதேனும் அரசு பரிசீலனையிலுள்ளதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறையிலுள்ள போக்குவரத்து மற்றும் தொழில் நுட்பப் பணியாளர்கள் ஆகிய இவ்விரு பிரிவினருக்கும் பொருந்தக் கூடிய ஒரு படித்தான ஊக்க போனஸ் அளிக்கும் திட்டத்திற்கான செயற் குறிப்பு ஒன்று துறையின் ஆய்விலுள்ளது.

திரு. கா. வேழவேந்தன் : தலைவரவர்களே, போக்குவரத்துத் துறையில் பணியாற்றும் தொழிலாளருக்கு இந்தக் காலம் வரலாற்றிலே 35 லட்சம் ரூபாய் போனஸ் தரப்பட்டு அவர்கள் மேலும் ஊக்கத்துடன் பணியாற்றிக்கொண்டு இருக்கிறார்கள். இன்னும் அவர்களிடத்தில் வேலை வாங்குவதற்கு அமைச்சர் அவர்கள் பரிசிலிக்கவேண்டுமென்றும் ஒரு திட்டத்தை வெகு வேகமாக அமுல்படுத்துவதற்கு முயல்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, தொழிலாளர்கள் ஊக்கத்தோடு பணியாற்றுகிறார்கள். அது உண்மை. அவர்களுக்கு மேலும் ஊக்கத்தை ஊட்டுகின்ற வகையிலும் பூரிப்பூதிய திட்டத்தை தரவேண்டும் என்பதற்கு அரசு பல்வேறு திட்டங்களை ஆராய்ந்து வருகிறது. தொழிற்சங்க தலைவர்களும் ஏதேனும் திட்டங்கள் கொண்டுவருவார்களேயானால் அதைப் பற்றி பரிசிலிப்போம் என்று தொழிற்சங்க தலைவர்களுக்கு எடுத்துச்சொல்ல விரும்புகிறேன்.

திரு. எம். தேவராசன் : தலைவரவர்களே, தனியார் பேருந்துகளைவிட அரசு பேருந்துகளில் கட்டணம் அதிகமாக இருப்பதால் நீலகிரி மாவட்டத்தில் அரசு பேருந்துகள் காலியாகவே ஓடுவது அரசுக்குத் தெரியுமா ? இதை தனியார் பேருந்துகள் போல் குறைக்க முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, கட்டண விகிதத்தைப் பொறுத்த வரை தனியார் பேருந்துகள், அரசு பேருந்துகள் ஒரே கட்டணத்தை வசூலிக்கவேண்டுமென்று இருக்கிறது. ஆகவே எந்தத் தனியார் பேருந்துகளாவது குறைவாகக் கட்டணம் வசூலிப்பார்களேயானால் அதை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவந்தால் அந்தத் தனியார் பஸ்களின் மீது அரசு நடவடிக்கை எடுக்கும். இப்போது வருமானம் குறையாது, அரசாங்க பேருந்துகளுக்கு கிடைக்கின்றது.

மீனாட்சி அம்மன் கோவில்

* 209 வினா—**திரு. பி. எஸ். மணியன் :** மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மீனாட்சி அம்மன் கோவிலைச் சுற்றிலும் நான்கு பக்கங்களிலும் காலி இடம் இருக்கிறதா ?

(இ) ஆம் எனில், அந்த இடத்தில் கடைகள் கட்டி வாடகைக்கு விடும் குறிப்பு பரிசிலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : (அ) ஆம்.

(இ) ஆம்.

திரு. கே. டி. கே. தங்கமணி : மதுரை மீனாட்சி அம்மன் கோவிலைச் சுற்றியுள்ள காலி இடத்தைப் பயன்படுத்த என்ன திட்டம் மேற்கொள்ளப் படும் என்று கேட்க விரும்புகிறேன்.